**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.53/2022 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஜானகிராமன் |
| Father Name | திரு.மாணிக்கம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.03.2026.**

**வா.சா.ஆ.6 தொடர்பான பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

பிரதிவாதி வங்கியில் வாங்கிய கடனுக்காக தான் அடமானப் பத்திரம் எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 16.11.2021 மற்றும் 18.11.2021 ஆகிய தேதிகளில் நான் வங்கியில் பணம் செலுத்தியதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 16.11.2021 மற்றும் 18.11.2021 ஆகிய தேதிகளில் பிரதிவாதி பெயருக்கு அந்த பணம் கொடுக்கப்பட்டது என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி வங்கியில் பெற்ற கடனை அடைப்பதற்காக தான் என்னோடு ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 15.12.2021-ல் எந்த பணப் பரிவர்த்தனையும் பிரதிவாதிக்கு நடைபெறவில்லை என்றால் சரிதான். 26.10.2021-ம் தேதி பிரதிவாதிக்கு வரைவோலை கொடுத்ததாக வா.சா.ஆ.6 வங்கி கணக்கு பட்டியலில் பதிவு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்திற்கும், வாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அடமானக் கடனுக்காக தான் பிரதிவாதி வாதியுடன் ஒப்பந்தம் செய்தார் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் போட்ட தேதியில் ரூ.23 லட்சம் வங்கி மூலம் வாதிக்கு கொடுக்கப்பட்டது. எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.